11th December 1961]

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—(a) & (b) Yes, Sir. A site has since been selected at Walajapet to locate the Centre.

SRI S. M. ANNAMALAI : இதற்காக எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியுமா ? இங்கே எந்த எந்தத் தொழில்கள் ஆரம்பிக்கக்கூடும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ரூ. 65 ஆயிரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தச்சு வேலை, கருமான் வேலை சொல்லிக் கொடுக்கப்படும்.

SRI A. A. RASHEED : May I know what the definition of 'semi-educated' is and is it the same thing as 'semi-doctors'?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not know about semi-doctors. But this means not fully educated; those who have read up to II Form or III Form or IV Form.

Inspector-General of Prisons (tour).

* 2227 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : சனம் **உள்** துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

இப்போதுள்ள **Inspector-General of Prisons** சிறை அதிகாரியாக நியமிக்கப்பட்டதிலிருந்து மாதாமாதம் ராஜ்யத்தில் எவ்வளவு நாள் பிரயாணம் செய்தார், ஜில்லாவாரியாக ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : வடாற்காடு ஜில்லாவில் உள்ள வேலூரில் ஜெயில் மிகப் பெரியது. அங்கேதான் பெண் களுக்காக தனியாக ஒரு ஜெயில் இருக்கிறது. மற்ற இடங்களுக்கு இருபது நாள், இருபத்தைந்து நாள் என்று விசிட் பண்ணி யிருக்கும்போது அங்கே மட்டும் எட்டு நாள் மட்டும் விசிட் பண்ணியிருக்க காரணம் என்ன ? அங்கே ஏராளமான தவறுகள் நடக்கின்றன, ஊழல்கள் நடக்கின்றன என்ற புகார்கள் வருகின் றனவே. ஆகவே இனிமேலாவது அடிக்கடி அங்கே போய் பார்வையிட ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பெரிய ஜெயில் களை ஆண்டுக்கு இரண்டு முறை விசிட் பண்ணவேண்டு மென்ற விதி இருக்கிறது. ஆனால் ஒரு விசிட்டின்போது எவ்வளவு நாள் போட்டுக்கொள்வது என்பது அங்கே இருக்கிற வேலையைப் பொறுத்தது.

---

a Printed as Appendix I on page 483 infra.